ஓலை 34 | ஓசை 129 | பிப்ரவரி 2023

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை.**

புகழையும் அறத்தையும் தாராத (தூய்மை அற்ற) செயல்களை எக்காலத்திலும் ஒருவன் செய்யாமல் விட்டொழிக்க வேண்டும்.

**Translation:**

From action evermore thyself restrain
Of glory and of good that yields no gain.

**Explanation:**

Ministers should at all times avoid acts which, in addition to fame, yield no benefit (for the future).

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# தமிழ் மொழி பாதுகாப்பில் நமது பங்கு

அமுதத் தமிழை உயிராய் நேசி
அழகுத் தமிழை தினமும் வாசி
தமிழை நாளும் தெளிவாய் பேசி
தகவாய் காப்போம் மொழியின் ஆசி

மொழியின் கூறு முழுதும் அறிய
முகிலும் திறக்கும் முத்தாய் இன்பம்
அழியா தென்றும் அறத்தின் மொழியும்
அகத்தில் உணர்வும் ஆறாய் வழியும்



முத்துக் கடலில் முகிழும் தமிழே
மூவா மருந்தாய் முகைக்கும் தமிழே
சத்தை ஊட்டும் சங்கத் தமிழே
சாலச் சிறந்த தவமாம் தமிழே

மொழியின் கற்பு முடங்கா வகையில்
மொழிவோம் தமிழை முருகாய் என்றும்
செழிக்கும் தமிழில் சேர்க்கை எதற்கு
செதுக்கே அயலார் சீரும் மொழியை

தூய தமிழின் தூணாய் இருப்போம்
தூண்டும் மோகம் தூர எறிவோம்
தாயாய் தமிழும் தகவாய் வளர்க்க
தகாத மொழியை பார்வை தெதற்கு?

உயிராய் உணர்வாய் உடுத்து தமிழை
உலக மொழியில் உச்சம் அதுவே
மயிலாய் மழையாய் மனத்தை ஈர்க்கும்
மாண்புத் தமிழை மறவா துரைப்பாய்.

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# வெகுளாமை

அதிகாரம் : 31




தேவையற்ற இடத்தில்
சினங்கொள்ளல் கூடா.
தகுதியுடைய சினமே
தக்கபலன் தருமாம்.

வலியோரிடத்தில் கொள்ளுஞ்சினம்
தனக்கே தீங்குபயக்கும்.
மெலிந்தோரிடம் கொள்தலினும்
தீமை வேறொன்றுமில்லையாம்.

எவரிடத்தும் சினங்கொள்ளாது
தீச்செயல் மறந்திடல்நலம்.
இல்லாங்கில் அச்சினத்தாலே
தீங்குகள் வந்துசேரும்.

முகமலர்ச்சி கொன்று
அகமலர்ச்சியையும் புதைக்கும்.
சினத்தைவிட ஒருவனுக்கு
வேறுபகை இல்லையாம்.

சினம் கொள்ளாதிருப்பவன்
தன்னைக் காப்பான்.
வெகுள்பவனை அச்சினமே
கொன்று பழிதீர்க்கும்.

சினமென்னும் கொடுந்தீ
சேர்பவரைக் கொல்லும்.
தன்னினமெனும் தெப்பத்தையும்
சுட்டு எரித்துப்போடும்.

நிலத்தை அறைந்தவன்கை
வலியிலிருந்து மீளாதுபோல்.
வலிமைகாட்ட வெகுள்பவனும்
தீங்கிலிருந்து மீளான்.

பெருந்தீயில் தள்ளினார்போன்ற
துன்பம் இழைத்தவனுக்கும்.
சினங்கொள்ளா பொறுமைகாத்தல்
அன்புடையோர் செயலாம்.

நெஞ்சத்தால் வெகுளாதிருத்தல்
ஒருவனுக்கு அவன்.
நினைத்தவை எல்லாம்
உடனே கைகூடிவரும்.

எல்லையற்ற சினங்கொள்பவர்
செத்தாரை ஒப்பர்.
வெகுளாமை கடைபிடிப்போரே
முற்றுந்துறந்த மேலோராவர்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# ஒளிவிளக்கு

மேழியைத் தோளில்தாங்கி மேற்குடி வயலில்நாளும்,
உழைத்திடும் வர்க்கம்தனிலே உழன்றிடும் ஏழையவனும்!
குழந்தைகள் இருவரென குறையிலா மழலைச்செல்வம்!
அழுகின்ற குழந்தைக்கு வேடிக்கை காட்டிடவே
வீழ்ந்திடுமே நிலவொளிதான் குடிசையினுள் ஓட்டைவழி!
அழுதிடுதே மெழுகுகளும் அவன்நிலையை கண்ணுற்று!
தொழுகின்றான் தொழிலினையே தொடர்ந்தவனும் தெய்வமென!
விழுதென பிள்ளைகளும் தாங்கிடுவர் தம்மையென
பழுதிலா நம்பிக்கை பலமளிக்க வாழ்ந்திட்டான்!
சுழலுகின்ற உலகிதிலே சூழ்துயரம் நிலையன்று
ஏழ்மை நிலைமாறும் என்றுரைப்பான் மகந்தனுமே!
சூழ்நிலை அறிந்த பலர் நல்கிட்டார் நல்லுதவி!
அழியாத செல்வமெனும் கல்வியினைத் தாம்பெற்று
உயர்வான பதவியிலே அமர்ந்திட்டான் அம்மகனும்!
கல்லாமை இருளைக் களைந்தனரே குழந்தைகளும்!
தளர்விலா ஊக்கமொடு தன்னம்பிக்கை துணையிருக்க
இல்லாமை ஒழித்த செல்வங்கள் இருவருமே
ஏழையின் குடிசையில் ஒளிவிளக்காய்த் திகழ்கின்றார்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# கவிதை





உனக்கு
வெற்றிடம்
நிரப்பும் உத்தி
காக்கைக்கு தெரியும்.
உனக்கு ?





கவிஞர் ரஞ்சித்குமார்.மா,திருநெல்வேலி

# அக்கரை பச்சை

நீ
இங்கிருந்து பார்த்து
வினவியது
விளையாடியது யாவும்
அங்கே சென்றால்
மறைந்துவிடும்.




ஆம் சொல்லி
ஆரம்பித்த அனைத்தும்
அப்படியா என மாறிவிடும்

கண்கள் பூத்துப் போனதும்
காரணம் தேடி அலையும்
சூரிய நமஸ்கார முட்டாளைப்போல
இங்கே இருப்பவையே
அங்கும் என
யோசித்து நகரும்
இன்டெலிசன்ஸ் களின் வண்ணம் நிறைந்த கரை.

அப்சுலுட்லி
இதெல்லாம்
ஏமாற்றத்தின் ஆரம்ப நிலை
வாரே வாவ் என
மிளிரும்
இக்கரையைத்
தாண்டிய
அக்கரை பச்சை.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்,நாகப்பட்டினம்

# கலிகாலத்திலும்

ஓட்டு போட்ட மக்களுக்கு
கொடுத்த வாக்கினைக் காப்பாற்றும்
பிழைக்கத் தெரியாத அரசியல்வாதி.

தம் மாணாக்கர்களுக்கு
நல்லதை மட்டுமே
போதிக்கும் அறவழி ஆசிரியர்.

துடிக்கும் எந்தவொரு
உயிருக்காகவும் மனம் விட்டு
வருந்தும் ஒருவன்.

அடுத்தவர்களுக்குச் சொல்லும்
அறிவுகளை அப்படியே
தானும் பின்பற்றும் ஏமாளி.

எதற்கும்
நியாய தர்மத்தின்படி
வாழ்வேனென அடம்பிடிக்கும் நபர்.

துரோகிக்கும்
தீங்கிழைக்காத கபடமற்ற
நல்லுள்ளம்.

குனிந்த தலை
நிமிராமல் வரையறைக்குள்
உழலும் பாவப்பட்ட ஒருத்தி.

வறுமையின் பிடியிலும்
சுக துக்கங்களுக்கு சொந்தங்களை
சேர்த்தணைக்கும் அறிவிலி.



தம்மிடம் இல்லாத போதிலும்
கடன் வாங்கி உதவும்
கள்ளமற்ற மனம்.

என-
இந்தக் கலிகாலத்திலும்
இருக்கத்தான் செய்கிறார்கள்.
மனிதாபிமானம் மிக்க
நல்லுள்ளம் கொண்ட மனிதர்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# எங்கெங்கும் இறைவன்

(நேரிசை ஆசிரியப்பா)

நித்தம் குழவியின் நித்திலம் மூரலில்
வித்துஈன் உணவால் விளைபசி அறுப்பதில்
அல்லல் ஆற்றும் ஆன்றோர் முகத்தில்
கல்லில் கண்ட கடவுளின் சாயலே!
நெஞ்ச மொன்று நிலவாய்
வஞ்சனை அறுக்க வாழுமே இறையாய்.

* நித்திலம் - முத்து ; மூரல் - சிரிப்பு ;




கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# தீதும் நன்றும்

முதுமைப் போர்வையில்
கயமைச் செய்வோரே!

இன்று இருப்போர்
நாளை இறப்போரன்றோ!

நிலையாமை நிலைத்த
எழிலான உலகமிது!

நல்லதைச் செய்திடுங்கள்.
அல்லதை
அகற்றிடுங்கள்.

நம்மை நல்லாற்றில்
சேர்த்திடும் நல்வழியிதுவே!

உலகில் வாழ்வோர்
யாவரும் கேளிர்.
உலகின் ஊர்கள்
எல்லாமும் நம்மூரே!

எண்ணங்களால் வாழும்
வாழ்க்கை நமது.
திண்ணமாய் நாமே
நமக்குப் பகைவர்.

சுவரில் அடித்தப் பந்தாய்
வருவனவே
நாம் செய்யும் வினைகளின் பயன்கள்.

நீர்வழியே தெப்பம்
சென்றிடும் அன்றோ!
ஊழ்வழியேச் சென்றிடும் நம் வாழ்க்கை!




அல்லல் நிறைந்த
உலகில் வாழ்வோர்
ஆற்றல் மிக்கோரைப்
புகழ்ந்து பேசுதலும்

ஆற்றல் குறைந்தோரை
இகழ்தலும் வேண்டாமே!

ஆக்கம் தேடி நித்தம் அலைவோரே
ஆக்கத்தை வறியோர்க்கு
ஈந்திடுங்கள்.

இவ்வுலகில் வாழ்வோர்
யாவருக்கும் தேவை
பசித்திட உணவும்
உடுத்திட உடையுமே!

முயற்சியால் சேர்த்த
செல்வம் அதைத்
துயருற்றோர்க்குப்
பகிர்ந்து அளித்திடுங்கள்.

முனிவு அகற்றி
பிறர் நலம் பேணிடுங்கள்.
கனிவோடு பேசி
அருளோடு வாழ்ந்திடுங்கள்!

கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர் அணை

# விடியாத இரவென்று எதுவும் இல்லை

இடி இடித்த வானிலும் மழையுண்டு
இதயம் உடைந்த போதிலும் பாதையுண்டு
இடைவிடாது வெட்டும் மின்னலிலும் ஒளியுண்டு
இமைக்காது விட்ட கண்ணீருக்கும் வழியுண்டு

நிலநடுக்கத்தில் பூமி பிளந்தாலும் சேர்வுண்டு
நித்தம் நித்தம் ரணமிருந்தாலும் துவக்கமுண்டு
நிலையில்லா வாழ்கையிலும் வெற்றி பதக்கமுண்டு
நிதானமாக சிந்தித்தால் புதிரிலும் பதிலுண்டு



இலைகள் உதிர்ந்து விட்டாலும் துளிருண்டு
இசையில்லா வாழ்விலும் ராகம் உண்டு
இடைவிடாது தட்டினால் திறப்பதுண்டு
இலாபமற்ற வியாபாரத்திலும் முயற்சித்தால் வரவுண்டு

கசப்பான பாகற்காயிலும் மருந்து உண்டு
கசங்கிய வாழ்விலும் நேர் உண்டு
கருங்கல்லை செதுக்கினால் அழகிய சிலையுண்டு
கலங்கிய விழிகளுக்கும் சாதனைக்கு யுக்தியுண்டு

இருள் நிறைந்த இரவிலும் நிலவுண்டு
இருண்ட மேகத்திலும் மழை உண்டு
இதயமே கலங்காதே வாழ்வில் அர்த்தமுண்டு
இதயத்தை தட்டி எழுப்பு இமயம் உனக்குண்டு

கவிஞர் ஜஸீரா ஜலீல்

# பெயர்கள்தான் என்ன

எப்படி சொல்வேன்
உன்னை சில கணமே
நான் பார்த்தது.



உனக்குள் நீ எழுதிக்கொண்ட
மரபுக் கவிதைகளை
எனக்குள் நான் சப்தமின்றி
வாசித்துப் பார்த்தேன்
சொல்லினிது பொருளரிது.

ஐயையோ வேண்டாம்
பேசிவிட்டால் விழிகள் விலாசம் கேட்கும்
மனம் தூதனுப்பும்
கலவரம் நடக்கும்
நிலவரம் சரியில்லை.
தூரமிருந்தே
சிநேகம் கொள்வோம்.

அவசர அவசரமாய் வந்த அலைச்சலில்
கைக்குட்டை எடுத்து
வியர்வை துடைத்தபடி
பயணிகள் நெரிசலிலும்
பார்வைகள் நொறுங்காமல்
பார்த்துக் கொண்டோம்.

நீயும் நானும்
ஏதோ அவசர ஆர்ப்பாட்டத்தில் வந்ததை
பயணிகள் கவனித்தனர்
அதை அறிந்து நமக்குள் நாமே
சிரித்துக்கொண்டோம்.

தூரத்தில் வரும் பேருந்து
நமதாக கூடாதா என எண்ணம்
உள்மனதில் ஓடிக்கொண்டிருக்க

பேருந்து வந்ததும்
நான் இங்கே
நீ பேருந்தின்
கடைசி படிக்கட்டோடு நின்று
கையசைத்த கடைசி நிமிடங்களிலும்
சொல்லிக்கொள்ளவே இல்லை
நம் பெயர்களை!

கவிஞர் கோ.டோன்குமார்,வேலூர்

# கற்க கசடற

கற்க கசடற எனும் கூற்றுக்கிணங்க
பிழையின்றி கற்றலுமிங்கே உயர்ந்ததாம்

பிச்சை புகினும் கற்கை நன்றே என்று
சான்றோர் பலர் உரைத்திட்டாலும்

இளமையில் வறுமையால் மழலைகளும்
தொழிலாளர்கள் ஆகிப் போயினரே

கற்க கற்க தாய்மொழியிலே
திறம்பட கற்க என்பதனை உணர்ந்தே

கற்க கசடற கற்றபின் கற்றதை
கல்லாதோருக்கு கற்றுக் கொடுத்தலே சிறந்ததாம்

கற்றுக் கொண்டதின் ஆனந்தமது
கற்றுக் கொடுப்பதிலே நிறைவடையுமே



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# மாய நினைவு

உச்சத்தில் இருக்கிறேன்
உலகை பார்க்க வைக்கிறேன்
ஒரு மணி நேரத்தில்
ஒரு கோடி ரூபாய் உழைக்கிறேன்
உறங்கவே நேரம் இல்லை எனக்கு
கண்கள் படும் இடம் எல்லாம்
தூய்மைகள் தவழும் இடம்
அணிகின்ற ஆடை எல்லாம்
உயர்ந்த விலை கொண்டவை
சுடக்குப் போட்டால்
சுற்றி நிற்பார்கள் மெய்க்காப்பாளர்கள்
உட்கொள்ளும் உணவில்
ஆரோக்கியமும் கட்டுப்பாடும்
பயணம் செய்ய
பல்லாயிரம் ரூபாய்
பெருமதியான வாகனங்கள்
நினைத்தால் ஆகாயத்தில் பறக்கிறேன்
நீரிலும் மிதக்கிறேன்
வீதியிலும் புடைசூழ போகிறேன்
அறிவில் முதிர்ச்சி
அனுபவத்தில் தேர்ச்சி
மரியாதை என் முன்னே மண்டியிடும்
என் பெயரின் முன்னே
கௌரவப் பெயர் தானே ஒட்டிக்கொள்ளும்
நினைத்ததை வாங்குவேன்
பல்லாக்கில் தான் பயணிப்பேன்
பாதம் தரையிலே
படாமல் பார்த்துக்கொள்ள வைப்பேன்
மக்கள் மத்தியில் நான் சென்றால்
எனக்கான பின்னனி இசையை ஒலிக்க வைப்பேன்
மக்களின் கவனத்தை
என் பக்கம் திருப்பி
நான் மனதால் பூரிப்படைவேன்



இவ்வளவும் இன்னும் சொல்லாததும்
என் மாய நினைவிலே
பதிவு செய்து வைத்த
ஒளிப்படம் போல் என்றும் இருக்கும்

கவிஞர் ஹஸன் எம் பஜீத்,இலங்கை

# கள்வனின் காதலி



என் நினைவுகளை
களவாடியவன்

எந்தன் பெயரை
மட்டுமே உச்சரித்து
வாய்மொழிகளில்
பெயரை களவாடியவன்

அலைகடலென எனது
ஆர்ப்பரிப்பை களவாடியவன்

வார்த்தையில் வசீகரத்தை
வார்த்து, அன்பை களவாடியவன்

எந்தன் அழைப்பில்
ஓசையை களவாடியவன்

துன்பமின்றி இம்சையை
களவாடியவன்

எந்தன் குருதியின்
நாளத்தில் ஊடுருவி

இதயத்தை களவாடிய
"கள்வனின் காதலி" நானே

கவிஞர் அம்பிகாதினேஷ்,திருநெல்வேலி

# உனக்காக



உன்முகம் என்னுடைய
சோகத்தை நீக்கும்
அழகிய நிலவு.
உன்கண்கள்
என்னுடைய
கவலைகளை நீக்கும்
கலங்கரை விளக்கம்.
உன்குரல் என்னுடைய
துன்பத்தை நீக்கும்
அழகிய பாடல் வரிகள்.
உன்பாசம் என்னுடைய
சோர்வை நீக்கி
சொர்க்கத்தை காட்டும் இடம்..
அதனால்தான்,
காலங்கள் கடந்தாலும்,
நான் உன்மீது கொண்ட பாசம் குறையாது,
நான் உன்னுள் தொலைந்து,புதைந்து
ஆயுள் உள்ளவரை ஆயுள்கைதியாக
உனக்காக மட்டுமே நான் வாழுவேன்.

கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முகமும் தமிழே!!

# எச்சரிக்கை விளக்கு

ஒத்திகை இல்லாமலே
வந்திறங்கி இருக்கிறோம்
இருக்கவும் இறக்கவும்
பூமியே இரண்டிற்கும்
மேடையாகிறது.

வாழ்வும் மரணமும்
எம் தொப்புள் கொடியிலிருந்து
கொடி பிடிக்கிறது.

பிறப்பின் இரகசியம்
அங்கேதான் ஆரம்பிக்கிறது.

அதுவே உயிரினங்களின்
சுகமும் சோகமும்
ஒன்றாக முடிந்து வைக்கப்பட்ட
ஆடுகளம் பெருந்திடல்.

வாழ்வின் சாயம்
இம்சிக்காதவரையில்
அது சுகானுபவம்
சாயம் வெளுக்கும் நேரம்
கறையான் அரித்த
கயிற்றுக்கட்டிலாய்த் தள்ளாடும்.

முடிவுக்காய் அந்த சிற்றோடையில்
புன்னகைக்கும் தென்றலோடும்
புயலோடும் அல்லாடும் பயணம்.

முடிந்த வாழ்க்கையின்
எச்சமாக இந்த மரணம்
எச்சரிக்கை விளக்கு



அதற்கப்பாலான விளக்கம்
யாருமே அறிந்திடவியலா
சிதம்பர இரகசியம்.

அதை அறிந்து கொண்டால்
வாழ்க்கை நரகமாகிறது.

அதை வெல்லத்துடிப்பவனுக்கு
அறியத் துணிந்தவனுக்கு
இறையை அணுகிட ஏங்குபவனுக்கு
உலகம் அற்பமாகிறது.
சமிக்ஞை விளக்கின்
பின்னரான பயணம்
அவனுக்கு நிம்மதியின்
சுவனமாகிறது!

கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# அடிமை கொளுத்து

ஆங்கிலேயர்கள் அடிமைப்படுத்தினர்
சுதந்திரம் பெற்றபின்பும் முடங்கிப்போய் இருந்தோமே
அடிமைமுறை இன்றும் இருக்கிறதே
ஒப்பந்த அடிப்படையில்
கார்ப்பரேட் கம்பெனிகள் எத்தனை எத்தனையோ



முதலாளிகள் தொழிலாளர்களை
அடிமைபோல் நடத்தும் அராஜகம்
இன்றும் தொடர்கிறதே

ஊழல் செய்த சொத்தை காப்பாற்ற
பினாமி என்ற முறையில்
உறவுகளை அடிமையாக வைத்திருக்கும்
அரசியல்வாதிகள் எத்தனையோ பேர்கள் அல்லவா

இவர்களும் சொகுசாக வாழ்வதற்காக
விரும்பிய அடிமையாகும் கொடுமைதான்
நடைமுறையில் சுதந்திரம் இருந்தும்
அடிமையாக இருக்கும் அவலம் ஏனோ?

"அடிமையின் உடம்பில் ரத்தம் எதற்கு - தினம்
அச்சப்பட்ட கோழைக்கு இல்லம் எதற்கு"
என்ற வரிகளை உணர்ந்திடுவோம்.

அடிமை விலங்கை உடைத்தெறிந்து
அனைவரும் சமம் என்று அறிந்திடுவோம்
பாசத்திற்காக அடிமையாக இரு
ஆனால் வேஷம் என்று அறியாமல் இருக்காதே

அன்புக்கு அடிமையாக இரு
ஆனால் அராஜகத்திற்கு அடிபணியாதே
அடிமை விலங்கு உடையாவிட்டால்
சுதந்திரம் பெற்று பயனேது?

சிந்தனைகளில் செயல்களில்
அடிமை முறையை உடைத்தெறிவோம்
கொத்தடிமை இல்லா சுதந்திர
பாரதம் படைப்போம்.

ஆறறிவு மனிதர்கள் நாம்
அடிமைத்தனை கொளுத்தி
மீண்டு வா மனிதா

கவிஞர் த சுமதி தசரதன்,சென்னை

# கடம்பவனம்

தமிழ் பண்பாட்டின் திருத்தலமே
கிராமிய கலை மன்றமே
நன்னனின் காவல் மரமே
இலைகளை மாலையாக கட்டி
இறைவனுக்கு அணிவிப்பாரே
மதுரை கடம்ப வனத்தின் சோலை வனமே
மரங்களை அழிப்பதன் மூலம் மதுரையானதே
வெளி நாட்டு பயணிகள் ரசிக்கும் இடமானதே
மண் சுமந்த கடவுளாகிய சிவபெருமான் இந்நகரிலே
அறுபத்தி நான்கு திருவிளையாடலை நிகழ்த்தினாரே
வாயில்கள் பல உண்டே
தூங்கா நகரமும் ஆனதே
வந்தாரை வாழ வைக்கும் சந்தன காற்றே
கடம்பவர காற்றில் கவி பாடும் கவிஞனே
நான்கு வேதங்கள் நாற்புர கோபுரங்கள்
மலைத்து நிற்கிறதே
கடவுளைக் காண காதலைக் காணவாருங்கள்
எங்கள் அழகர் குடியிருக்கும் அழகர் கோவிலிலே
எங்கள் ஊரில் பொற்றாமரை வேரானது
எங்கள் தமிழ் அன்னையின் பூரிப்பு ஆனதே
மதுரையின் அழகை காண வாருங்கள்
அனைவரும் கண்டு ரசிப்போமே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# வாழிய வாழியவே

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே
வாளோடு முன் தோன்றி மூத்த குடி
உரக்கச் சொல்வோம்.
ஓர் எழுத்தில் பல பொருள்
கொண்ட தெங்கள் மொழியே.
ஓம் எனும் இரண் டெலுத்தில்
இறையை அடைவதற்க்கான
வழியை கூறி, உள்ளொழியை
உணரச் செய்த தெங்கள் மொழியே.
அம்மா என்ற மூன்றெழுத்தில்
அன்பு, கருணை, பொறுமையை
கற்பித்த தெங்கள் மொழியே.
அப்பா என்ற சொல்லில்
பொருப்பு, உழைப்பு, கடமை
எடுத்துரைத்த தெங்கள் மொழியே.
உலகத் துள்ளோர் அனைவருக்குமான
வாழ்க்கை பாடத்தையும், அறிவுறுத்தல்களை,
ஆலோசனைகளை, இரண்டே வரியில்
வழிகாட்டிய, காட்டிக்கொண்டிருக்கின்ற
ஒரே மொழி எங்கள் தமிழ் மொழியே.
உள்ளத் துணர்வுகளை கவிதையாக
பாக்களாக, வரி வடிவங்களாக
எளிமையாக,இனிமையாக
எடுத்தியம்பிய இலக்கியங்களும்
காப்பியங்களும் கொண்ட தெங்கள் மொழியே,
எங்கள் அன்னை மொழியே.
கடற்கோள்கள் பல
கடந்தும், மனம் கமலும் மொழி
எங்கள் அன்னை மொழியே.
வாழிய வாழியவே.



கவிஞர் சாந்தி

# தமிழ் மொழி

மழலை மொழி அறியா தந்தையும்
தன்முகமறியா குழந்தைக்கு தன் கைப்பேசியில்
தட்டிடுவான் பல வாழ்த்துக்களையுமே!

முன்னேற தெரிந்தவன் முன்மொழியும் மொழிகள்
முயற்சியும், முழு உழைப்பும்!
காதல் மொழி காதலனும்
கயவன் மொழி கக்கிடுவான் கணவனானபின்னே!

பிஞ்சு குழந்தையின் அழுகையும்
பிணமான பின் பிறரின் அழுகையும்
பிசறி எடுக்கும் கண்ணீரின் மொழி!

சுற்று பயணங்களும் அறியா மொழியையும்
அறிய வைக்கும் அரிதான நேரங்கள்.
இயற்கை மொழியதுவம் அறிந்தும் அறியா
மனிதனுக்கே மலைபோல் இன்னல்களுமே!




மதுரையை சிறப்பிக்கும் தமிழ் மொழி
மா என்பது பசுவின் மொழி
மின்னல் கீற்று மழையின் மொழி
முருகப்பெருமானுக்கு தமிழே மொழி
மூலதாரமான மனிதனின் தாய் மொழி
மெல்லிய இசையும் மகிழ்ச்சியின் மொழி
மேடை நாடகங்களில் உணர்ச்சி மொழி,
மைதானம் பேசிடும் விளையாட்டு மொழி
மொழி இல்லா மொழியதுவும் இதயத்தின் மொழி
மோகனபார்வையில் காதல் மொழி
மௌனமான மனிதனின் அர்த்த மொழி
அம்மாவின் அன்பு மொழி!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# உன்னைத் தழுவிச் சென்ற காற்று

நதிக்கரையின் பசுமையான
நாணல்கள் காற்றாட.

ஓடி வரும்
கடலலை பாதச்சுவடுகளில்

தடயங்களைத் தாண்டி
தழுவியதிலே ஞாபகங்கள்

ஆதரவனின் வருகையில்
ஆழ்ந்தோடும் வாடைக்காற்று

உன்னைத் தழுவிச் சென்ற காற்று

என்னைக்கேள்வி
எழுப்பி எகிறியது

தொடவோ தூரம்
தள்ளி நிற்கவோ?



தழுவிடவோ உன்னைத்
தாண்டி போயிடவோ?

மனமே பதில்
மருகிட எதிரில்

ஏக்கத்தோடு கைகட்டி
எட்டிப்பார்க்கும் தென்றல்

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# உணர முடிகிறதா உன்னால் அவளை?

மங்கலம் வாசிக்க
மணமேடை வரவேற்க
சம்பங்கி வாசம் வசந்தமாய் வீச
ரேகை பதிய இறுக பற்றினேன்
என்னவனை.

அளவற்ற ஆனந்தக்கூச்சல் அந்நாளில்
ஆசையாய் காத்திருந்தேன்
மணமகனை காண
மணமகள் அறையிலே.

இரா கணம் நெருங்கிட
மணமேடையிலே புகைப்படத் திருவிழா.
புடவை மாற்ற கேள்வி எழ
நாணம் மறைந்த விழியிலே கசிந்தன
துளியாய் கண்ணீர் துளிகள்.



மணமகனை ஆவலாய் காண
காத்திருந்த மணமகளுக்கு ஏச்சுக்களே
ஆடவனின் காதல் பரிசாய்.
கேளியாய் உறவுகள் நகைப்பு.

மங்கை மணம் பதற்றமாய்
மதிக்கெட்டவளாய் பார்வைகளுக்கு.
காதல் மறைத்த விழியை
மதி எட்டாது விழிநீர் பொங்கினவே.

பாவை எண்ணம் யாரறிவாரோ?
உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# மாயை உலகம்

நெஞ்சி னிக்கப் பேசாத
நெடுநாளா அழுகிறது மனம்
நெஞ்சில் ஈரமில்லாத ஈரமற்ற
நேசிக்கத் தெரியாத மனிதர்கள்!

உள்ளம் துடிக்க வெடிக்க
உறவும் வெறுக்கிறது சலிக்கிறது
உலகம் முழுவதும். மாயை
உண்மை யில்லாப் பொய்யே!



பணமும் பெண்ணும் மண்ணும்
வாட்டி வதைக்கிறது வையத்தில்
மனித இனத்தை தினமும்
மரித்திட செய்து விடுகிறது

காலம் கலியுகம் நிசமே
காட்டி நிற்கிறது நாளுமே
கடவுளும் உடனுக் குடனே
களைந் தெடுக்கிறார் உலகை

கவிஞர் ஜெயா ஸ்ரீ,லண்டன்

# அன்னையுமாகி நின்றாள்

அன்னையுமாகி நின்றாள் அக்கா
அணைத்து கொண்டு அடை காக்கின்றாள் அக்கா

அன்னை தந்தை எங்கே? வினவுகின்றான்

நமக்கும் கீழே உள்ளவர் கோடி
நமக்கும் மேலே மீட்டெடுக்கிறார் போராடி
தாயுள்ளம் கொண்ட கோடி
கை கொடுக்குது அயராது நலம் நாடி

இன்னும் ஒரு நொடி பொறுத்திரு
இன்னும் ஒரு அடி மேலெழும்பு



மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தால்
உயிர் பிழைத்திருந்தால்
வரலாறு படைப்பாய்
வரமாய் வந்துதிப்பாய்

ஆதரவாய் அக்கா நானிருக்கேன்
அள்ளி அணைக்க அம்மா காத்திருக்கா
ஆதரவாய் தழுவ அப்பா தவமிருக்கார்

கண்ணுறங்காதே கண்ணே
கிஞ்சித்தும் கலங்காதே பொன்னே
அக்கா நானிருக்கேன்
அன்புக்கு பஞ்சமில்லை
ஆகாரத்துக்கு மட்டும் இப்போ வழியில்லை.

விதியை வென்றெடுப்போம்
உறுதியை கை பிடிப்போம்
மீண்டும் புதிதாய் பிறந்த வந்து வாகை சூடுவோம்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# ஏற்பாடு

மாதாக் கோவில் மணியோசைக்
கேட்டதும்
பெருமாள் கோவில் திரும்பும்
புறாக்கள்

எத்தனை முறை தவறி
கீழே விழுந்தாலும்
ஏற்றுக் கொள்ளும் கடற்கரை

உலக மக்களின்
பசியைப் போக்கி ரட்சிக்கும்
நெய்தலின் ஏற்பாடு

பூமிதாயின்
வயிற்றுப் பகுதியே
கடல்

இருள் சூழ்ந்த உலகிற்கு
ஓர் வெளிச்சம்
அந்த நிலா



கவிஞர் இரா.மதிராஜ்

# எம் தமிழே!

என் இனிய தமிழ் மொழியே
உன்னுள்தான் எத்தனை பேரழகு

பல்வேறு மொழிகளைக் கற்றுத் தேர்ந்தாலும்
எம் தமிழ் மொழிக்கு ஈடாகா.




பண்டைய ஆதிகாலம் முதல்
இன்றைய நவீன காலம் வரையில்

வளர்ந்து வரும் எம் தமிழின் சிறப்பு
அளவிடமுடியாதது.

உன் மீது கொண்ட பற்றினால்
உனை நீங்காமல்
உன்னிடத்திலே வந்து தஞ்சம் புகுந்தேன்.

உன் மொழிச்சுவையில்
உள்ளத்தில் இன்பத் தித்திப்பு அடைகிறேன்
எம் தமிழே!

கவிஞர் அகல் தாமரை "கவி",கமுதி

# வாய்மை

அறத்தின் கூரிலே
அகிலமே மீண்டது.

ஆர்ப்பரிக்கும் வெள்ளமாய்
பொய்மை படர்ந்திருக்க.

உண்மையின் மெய்யொழியாய்
மென்மையாய் நுழைந்ததே.

நிலைக்காத மானிடர்
நினைத்தது நின்புகழே.

புகழோடு பூத்தது
புல்லரிக்கும் வாய்மையே.

மனசாட்சி அடகுவைத்து
பொய்சாட்சி ஆகாதே.

அகத்தின் மெய்மையை
வாய்மையால் அறியுமே.

பொய்மையின் பொல்லாப்பு
காரிருளில் சூழுமே.

இனியோர் பிறவி
இவ்வுலகில் இல்லையே.

அன்பினிலே விளைந்து
வாய்மையால் காத்து.



நீடித்த சொல்லாட்சியில்
நிலைக்கும் நம்புகழே.

காந்தி அறக்கூற்றை
காலத்தில் தொலைக்காமல்

காலக்கணிதனாய் காலத்தில்
பறைசாற்றும் வாய்மையே.

காந்தி அறக்கூற்றை
காலத்தில் தொலைக்காமல்.

காலக்கணிதனாய் காலத்தில்
பறைசாற்றும் வாய்மையே.

அரிச்சந்திரன் வீழ்ந்தாலும்
விழாது வாய்மையே.

வாய்மையால் மலர்ந்திருப்போம்
வாடாமல் நிலைத்திருப்போம்.

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# இனிமைத் தமிழே

எம்மொழிக்கும் மூத்த தமிழ் மொழியே
எம் மொழியாய் வாய்த்த தமிழே
தாய்மொழியாய் வாய்வழியே தயங்காமல் வந்திடுவாய்
குன்றா இளமை பெற்ற உன்னை
என்று பிறந்தவள் என்பதை யாரறிவார்?
முத்தமிழாய் மூவினமாய் மூவேந்தர் மடிதவழ்ந்தாய்
பூவுலகில் நறுமணமாய் எங்கும் கமழ்கிறாய்
செம்மொழியாய் நிலைபெற்று எங்கும் திகழ்கிறாய்
தனியாய் இயங்கும் தனித்துவம் பெற்றாய்
பிறமொழிக் கலப்பின்றி மகத்துவம் கொண்டாய்
உறவாய் உயிராய் என்னில் கலந்தாய்
உச்சரித்தால் கற்கண்டாய் நாவில் இனிப்பாய்
தேனாய் கரும்பாய் இனிமை கொள்வாய்



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# கூடா நட்பு

மெல்லிசை கேட்டினும்
மௌனம் இசையை தூண்டும்
நீரும் நெருப்பும் கூடா நட்பு
சேரும் சகதியும் ஏது சிறப்பு
மதி சொல்லும் பாதை
துதியென நினைத்து
கதியென அணைத்து
விதியென நினை
மதியோடு புனை
மற்றதை விடு
மனம் மௌனத்தின் பிறப்பிடம்
சிந்தனையின் சிறப்பிடம்
அன்பின் முதலிடம்
மனதினை அரவணைத்து செல்
உன்னை நீ நேரில் கவனி
அழைத்துச் செல்லும்
கூடா நட்பு குழந்தையிலேயே நிறுத்து
பாதியிலே வேண்டா வெறுப்பு
நின்ற சுவர் கடிகாரம் காட்ட நேரம்
நிறுத்திய நட்பு காட்ட வெறுப்பு
நிகழ்நிலை நகரும் சிறப்பு




கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# தலைகுனிந்து கண்ணீர் வடிக்கின்றனையே தமிழகமே!

தமிழகமே! தமிழகமே!
தலைகுனிவு அடைந்தனையே
தமிழகமே! தமிழகமே!

பசுவின் கன்றைக்
பாலகன் கொன்றானென
பார்க்காது பாவம்பசுவென,
கன்றைக் கொன்றவனைக்
காவலன் மனுநீதி
காலனுக்கு இரையாக்கிய
தமிழகமே தமிழகமே
அன்னை நாட்டை
அயலாரின் அட்டூழியம்
தாக்காது காத்தவொரு
தமிழகம்சார் இராணுவவீரனை
தமிழனொருவன் அநியாயமாய்க்
கொன்றதாய் வந்திடும்
கொடூரச் செய்தியறிந்து
தலைகுனிவு அடைந்தனையே
தமிழகமே! தமிழகமே!



பசியால் துரத்தியவொரு
பருந்திடமிருந்து தப்பிக்க
சிபியிடம் சரணடைந்த
சின்னஞ்சிறு புறாவை
தன்சதையீந்த வனன்றுகாத்ததால்
தரணிபுகழ்ந்த தமிழகமே
கோவலனைக் கொன்றகாவலனால்
தலைகுனிந்தநீ இன்றும்
தாய்நாட்டின் வீரனைக்கொன்ற
கயவர்செயலால் வடிக்கின்றாய்
கண்ணீரைத் தலைகுனிந்தே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

# கனாக்களின் ரகசியத்தினுள்

கனவின் உள்ளிருந்து
கண் விழிக்கிறேன்
காணாமல் போகிறது
காத்திருப்பின் ரகசியம்
அழியும் நினைவுகள்
அழிக்கும் நினைவுகள்
வாழ்வின் வரங்கள்
வாழ்தலின் சாபங்கள்
எண்ணங்களின் இடையூறுகள்
எண்ணுதலின் இமயங்கள்
இளைப்பாற்றும் இதயங்கள்
இளைக்க வைக்கும் வேடங்கள்
கண்ணீரின் ரசனைகள்
கண்ணீராகும் தருணங்கள்
இப்படியாக
இருப்பின் மகிழ்வில்
விழி திறந்தவனின் கனவை
கசக்கி போட்டது
மிச்சம் வைக்காத விசாரணை வினாக்கள்
ரகசியம் தொலைத்தபின்
காணாமல் போகிறேன்
கனாக்களின் ரகசியத்தினுள்.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# காதல் புழமொழிக்கூக்கள்


தங்கம் தரையிலே
தவிடு பானையிலே
காதலில் அந்தஸ்து!

---

சுட்ட மண்ணான நான்
பச்சை மண் நீ
காதல் ஒட்டு!

---

சுடர் விளக்காயினும்
தூண்டுகோலாய்
காதல் கண்கள்!



---

சுவரே இல்லாமல்
சித்திரங்கள் சரித்திரத்தில்
காதல் கலை!

---

சுத்த காதலனுக்கு
உயிர் துரும்பு
காதல் இரும்பு!

---

செக்களவு தான்
செதுக்கியுண்போம் காலம்முழுதும்.
காதல் பொன்!

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

# காவியம் பேசும் கற்பாவையர்

என் கனவுகளை காலத்தின் விரல் தீண்டும்
குழந்தையாகி கோபுரச் சிற்பம் தரையிறங்கி
சிறுமணலில் பாதம் பதிக்கும்

கருங்கல் பதியாத குறுமணல் வழியே
நடைபயில சிதையாது இறங்கி நடக்கும்
சிற்பத்துடன் காலத்தின் கதை கேட்டு
காவியங்களில் தனை மறக்கும்

பக்தியில் திளைக்காத கதையாடல் எமது
கலை கூறும் மொழி
நடை கூறும் துள்ளல்
விரல் பிடித்த பொம்மை
விதியோடு ஓர் விளையாடல்



அடி அடியாக அன்னம் துணைவர
அள்ளி முடிக்கமுடியாத சடையோனின்
பாதம் சுற்றி வரும் இன்பம்

இளைப்பாறி அலுத்துப் போய்
தூண் சாய்ந்து நிற்கும் ஆடல் மகளும்"
சலங்கையொலி குலுங்கி கெண்டக்கால் தொடும்
பின்னல் அதிர என்னுடன் நடக்கிறாள்

பக்தியில் பிதற்றி வேண்டுதலில் துவளும்
வகையல்லயிவளென இட வல விரல் பிடித்து
சிற்ப பாவைகள் இணைந்தே கதை சொல்லின
காலம் சுமந்து நிற்கும் கற் பாவையரன்றோ

பக்தர்களின் கண்ணீர் வழிந்த கலைக்கூடம்
கறை ஆனகதை கூறி வெம்பியது
சலைக்காது கேட்டும் அலுக்காது கதையாடியது

கற்களில் சமைந்தாலும் காலத்தின் கதை
சொல்ல காத்திருந்தது கண் வியந்து.
கற்பாவையர் எனினும் கூட்டத்தில் வியர்த்த
பிசுபிசுப்பில் சோர்வு தனை சுமந்தது

காலத்தின் கதை கேட்கும் செவி
கண்டதும் ...கடந்ததை கடப்பதை கருத்தாய்
கூறி தோளணைத்து தூண் சேர்ந்தது!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# நீ வருவாயா?

திரைகடலோடி நீ
திரவியம் சேர்க்கையில்
தினம்தினம் பூரித்தேன்
திரும்ப போவதில்லையென
தீர்மானித்த போது
திடுக்கிட்டே போனேன்
நவீனங்களின் வசதியால்
கணினியில் கண்ட போதும்
கையால் தலைவருடிட
தடுக்கிறது கணினித்திரை
உன்னைக் காண வர
உத்தேசிக்கியிலே
உனக்கு குளிர் ஆகாதென
உரைத்த மகனே.
உனக்காக காத்திருக்கிறேன்
உறையவைக்கும் குளிர்பெட்டியில்
ஆசையாய் அன்னமிட்டவளுக்க
அரிசிபோட வருவாயா?
அன்பு மகனே.



கவிஞர் ஷீலாதேவி அருணாசலம்,நாகர்கோவில்

# தாவணிச் சிலை

மல்லிப்பூ வாசத்தோடு மனசுக்குள் நீயும்வந்திட
வட்டமுக அழகில் வெட்டுபட்டு விழுந்தேனே
மான்விழி பார்வையில் மீளாமல் தவித்திடவே
இமைநிழலில்  இளைப்பாற அனுமதி தருவதை
பூவிதழ் மலர்ந்து
இனித்திடச் சொல்வாயா
ஓயாது துரத்திடும் உன்நினைவில் துடித்திட
விழிகளுக்குள் சிறைபட்ட என்நிலையும் என்னாவதோ
சிந்திய சிரிப்பில்
சிதையாமல்  வாழ்ந்திடவே
தாவணிச் சிலையுன் தரிசனத்திற்கு தவமிருக்க
வாசத்தோடு வந்தவள் உன்னையே சுவாசித்தேன்
தென்றலென உரசிடவே
தீபற்றியெரியுதடி என்னுயிரும்
வார்த்தையொன்று சொல்லிவிடு
வாழ்ந்திடுவேன் உன்னோடு.



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# மானுட பயணம்

சாரல் மழைகள்
சாகா வனங்கள்

உயர்ந்த மலைகள்
தெளிந்த நீரோடைகள்

மழலை மனங்கள்
மாறா புன்னகைகள்

தடுக்கி விழும் முன்
தாங்கும் கைகள்

இடக்கை அறியா
வலக்கை உதவிகள்

இருட்டு குகைக்குள்
தலைகீழ் வவ்வால்கள்


இருப்பதில் நிறையா
நீளும் திருவோடுகள்

மந்திர தந்திரங்கள்
உருவமில்லா பிம்பங்கள்

உண்மை மாற்றும்
மாயாஜால கண்ணாடிகள்

விமர்சன சுட்டுவிரலில்
கற்பனை தூரிகைகள்

கயிறு பாம்பாகும்
காட்சிப் பிழைகள்



இன்ப துன்பங்கள்
முடியா கேள்விகள்

விடை தேடி ஏறுபவருக்கு
நங்கூரமற்ற கப்பல்கள்

இறுதியில்
பிறவிப் பெருங்கடல்
நீந்த சொல்லி
கடவுளின் கடிதங்கள்

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# ஹோபிலமட அழகியசிங்கர் 46வதுபட்ட ஆசாரியர்

## ஹோபிலமட அழகியசிங்கர் 46வதுபட்ட ஆசாரியர்
## ஸ்ரீவண் ஸடகோப ஸ்ரீரங்கநாத யதீந்த்ர மஹாதேஸிகர்



ஆனிமகம் அவர்தோற்றம்! பத்தொன்பது நூற்றினது
ஐம்பத்து ஐந்தினிலே ஜூன்திங்கள் இருபத்து
மூன்றாகும்! கௌண்டின்ய கோத்திரத்துத் தோன்றலவர்!
திருவாரூர் மாவட்ட நற்றில்லை விளாகத்தே
பக்தவத்சலா சாரியர்க்கும் ராஜலக்ஷ்மி தம்பதியர்க்கு
நான்காவது சேயானார்! இட்டபெயர் ரங்கராஜன்
என்பதுவே! தந்தைதாய் முந்தையர் வைதீகர்!
ரிக்வேத அத்யயநம் நற்றிறனைப் பெற்றிட்டார்!
இவர்தமக்கு முக்கூரார் ஸமாஸ்ரயணம் பரண்யாஸம்
சேர்ப்பித்தார்! நாற்பத்து நான்கவரும் நாறபத்து
ஐந்தாமவர் இருவருமே திறன்யாவும் கூட்டினரே!
ரிக்யஜுரும் ஸாமமென வேதமூன்றின் மந்திரங்கள்
மாத்திறமை உற்றிட்டே ப்ருஹஸ்பதி தேர்ச்சிபெற்றார்!
முப்பத்து மூன்றகவை க்ருஹஸ்தாஸ்ரமம் நேரேற்றார்!
பத்தினியாய் வாய்த்தவரோ கௌஸல்யா தேவிபேரார்!
க்ருஷ்ணமாச்சார் புத்ரியேதான்! மகள்மூவர் மகனொருவர்
வாய்த்தனரே! ஐம்பத்து நான்கான வயததனில்
துறவறத்தை ஏற்றிட்டார்! இருபத்து ஓராண்டு
இல்லறத்தைக் கொண்டிருந்தார்! நால்வர்க்கும் மணமுடிக்காது
தாயவட்கே கடமையாய் மடந்தனிலே ஸந்யாஸியாய்
கைங்கர்யம் ஏற்றாரே! ஸ்ரீரங்கம் தஸாவதாரர்
ஸந்நிதியில் மடாதிபதி என்றானார்! இவ்வாண்டு
அறுபத்து எட்டகவை நண்ணுகின்றார்! ஸஞ்சாரம்
மங்களாஸா ஸனத்தோடு உபந்யாஸம் நேர்தொடர்ந்து
முன்னரிருந் தாச்சாரியர் போற்றியேதான் அவர்சுவடு
பற்றுகின்றார்! முன்னவர்தாம் பரமபதித்த பின்னாலே
பிருந்தாவன நிர்மாணம் செய்திட்டார்! நிர்வாக
ஆற்றலினார்! விருதுபல பெற்றிட்டார்! ராமானுஜ
ஸித்தாந்தம் பரப்புதலும் வைணவம்தான் தழைத்திடவே
நின்றிலங்கும் நிமலரிவர்! ஸேவையினால் ஓங்குகவே!

**கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)**

# பாசத்தில் பிணைந்த பசு

பசுமைப் புல் மேயும் பசுவே
பார்க்கையில் அன்பு மேவிடும் சிசுவே
பற்பல சிறப்புகள் நீ பெறுவாயே
பைந்தமிழில் அம்மா என்று அழைப்பாயே

பசியாறப் பால் தந்து தாயாவாய்
பாசத்தால் அணைந்தே அருமைச் சேயாவாய்
பண்புடன் இல்லத்தில் இன்னொரு உறவாவாய்
மாண்புகள் தன்னகத்தே கொண்டவள் நீயாவாய்

பாலெடுத்து பல பொருட்கள் ஆக்கியே
பசிதீர ருசியாக நாம் புசிப்போமே
சாணம் அதுவும் இயற்கை உரமாம்
சாதுவான பிராணியாம் இறைவன் வரமாம்



கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான் குடி(இலங்கை)

# காலாவதி

ஏறி இறங்கி
அலைந்து திரிந்து
அலசி ஆராய்ந்து
ஆசையுடன் வாங்கும்
பொருளுக்கு இருக்கும்
காலாவதி தேதியை கூட
ஒரு வகையில்
நியாயம் என ஏற்றாலும்




உணர்வுகளால் பின்னப்பட்ட
உறவுகளுக்கும் அதே போல்
காலாவதி தேதி இருப்பது
எந்த நியாயத்தை சாரும்?
அதிலும் குறைந்த பட்ச
உத்திரவாத காலம் கூட
இல்லாத நிலை
எந்த தர்மத்தை சாரும்?

கவிஞர் மதுகை,திருச்சி

# காதலின் போதை

காதல் போதையில் கவிதை வடித்தேன்
கனவில் தினமும் கண்டிட துடித்தேன்

உதட்டு சிரிப்பில் உள்ளம் மகிழ்ந்தேன்
ஒருமுறை பார்த்தால் உணர்வில் நெகிழ்ந்தேன்

காதல் வானிலே கவிதை வரைந்தேன்
உன்னுடைய நினைவினிலே உடலில் கரைந்தேன்

உன் பேரழகில் பனியாய் உறைந்தேன்
இறுதியில் மனதில் மெல்ல நிறைந்தேன்

உண்ண மறந்தேன் உறக்கம் இழந்தேன்
கடைக்கண் பார்வையில் உள்ளம் மகிழ்ந்தேன்

கைகோர்க்க நாள் ஒன்றை குறித்திடுவோம்
கவலையை மறந்து இணைந்து வாழ்ந்திடுவோம்



கவிஞர் ஜெ.சிவக்குமார் ஜெயபாலன்,அருளவாடி

# தமிழுக்கு நிகரேது (அந்தாதி)

தமிழுக்கு நிகரான
மொழியேது உலகில்
உலகில் என்றும்
உண்மையாக வாழ்ந்திடு
வாழ்ந்திடத் தேவை
அன்பும் பொறுமையும்
பொறுமை தந்திடும்
சீரிய சிந்தனை
சிந்தனை தழைக்க
வாணாள் சிறந்திடும்
சிறந்த மனிதனையே
உலகம் விரும்பும்
விரும்பும் அனைத்தும்
மண்ணில் செழித்திடும்
செழிக்கும் உழைப்பு
தந்திடும் உயர்வு
உயர்வும் மதிப்பும்
உண்டன்றோ தமிழுக்கு




கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை(இலங்கை)

# நீ ஓடு!

ஓடு ஓடு நீ ஓடு
ஒரு வாழ்வை தேடி போராடு
வாய்ப்பு ஒன்று உண்டு
அதை நாடி நீயும் தேடு



அறிவைப் பெற்று வாழ
அறிந்து கொண்டு ஓடு
திட்டமிட்டு வாழ
தினமும் திட்டம் போடு

கண்கள் காணும் யாவும்
மெய்யின் ரூபம் இல்லை
மாயை கூட முன்னால்
மதியை மயக்கும் பின்னால்

ஆற்று நீரை போல
தெளிந்து ஓட பழகு
இலக்கு என்ற ஒன்றை
இமயம் போல கருது

துணிவு கொண்டு ஓடு
துணிச்சலோடு வாழு
எட்டு வைக்கும் ஓரடியும்
சிதறிடாது பாரு

முட்கள் கொண்ட பாதை
உலகம் எங்கும் உண்டு
கவனம் நீயும் கொண்டால்
காலில் காயம் ஏது

துவண்டு போகும் எண்ணம்
துளியும் இன்றி ஓடு
காயப்பட்ட போதும்
கலங்கிடாது வாழு

கடினம் கடந்த பின்னே
கடந்த பாதையை திரும்பி பாரு
உலகமே உன்னை
உயர நோக்கும் பாரு

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்( இலங்கை)

# ஒற்றைப் பார்வையில்



கரைந்திடும் நெஞ்சம்
காதலால் தான்.
காதலை வெளிக்கொணரத் தெரியா
காதலனை கொண்டதாலே.

கவி வடித்தும் படிக்க விருப்பமில்லை
அவனைப் பற்றிய வரிகளை
இரசிக்கவும் தெரியவில்லை.

விழியோடு விழிப் பதித்தும்
பார்த்து நாணத்திலே விழி மறைக்க
இமை துடித்தும் காதலிக்கவில்லை.
அதரம் கதைக்க சொல்லிடவில்லை.

ஆதங்கம் அவளுக்கானலும்
ஆசை வார்த்தைக்கு ஏக்கம் கொண்டாலும்
ஆவல் மௌனமௌனவே.
காதலும் காமமும் ஒற்றைப் புன்னகையில்.

புலனம் வழி குறுஞ்செய்தியும் இல்லை
எழுத்து வழி கடிதங்களும் இல்லை
தடையாய் ஏதுமில்லை
காதலுக்கு குறைவுமில்லை

வருகை தர தாமதத்திற்கு வருத்தமும்
வசந்தப் புன்முறுவலுக்கு
ஆசையுடன் வாயில் தேடி ஓட
சின்னதாய் இருந்த சினமும் பறந்தன.

ஒற்றை பார்வையில்
பேரானந்த புதையல் குவியல் விழி முன்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# அலைபேசி

உன்னை மட்டுமே பார்க்கிறேன்
உன்னை மட்டுமே கேட்கிறேன்
உன்னைத் தீண்டியே நாட்கள் தொடங்கும்
உனக்குள் மட்டுமே என்னுலகம் அடங்கும்
உன் கண் சிமிட்டலில் உறையவைப்பாய்
என்னை உனக்குள் நிறையவைப்பாய்
தொல்லைகள் பல தரினும்
எல்லையில்லா மகிழ்ச்சியும் நீ
எனதருமை அலைபேசியே!



கவிஞர் ந.க.மணி,கிளியனூர்,திருவாரூர்

# வானம்

வாழ்க்கையில் போராடு
வானம் குடையாகட்டும்

இருளும் ஒளியும்
வானின் ஏற்பாடன்று

ஓய்விற்கும்
உழைப்பிற்குமான
இறை அருளாகும்

உனக்காயும் எனக்காயும்
பேதங்கள் அதற்கில்லை

வானின் கீழ்
மதத்துக்கும் மனிதத்துக்கும்
சம்பந்தமுமில்லை

வானம் குடையாக
நீயும் நானும்
இவ்வுலக வழிப்போக்கர்கள்

இன்பமும் துன்பமும்
இறைவிதித்த பாதைகள்



கவிஞர் ஷெண்பகச் சோலையாள்,ஆய்ஷ்

# நான்

பெருங்கும்பல்
பலச்சத்தம்
இருந்தும் தனிமையின் சாயல்.

பெருவெளி சூழ் மனிதர்கள்
பற்றிக்கொள்ள ஒரு கரம்
அற்ற துயர்.

பேரிடரின் பள்ளத்தாக்கில்
சரிந்த நெற்றி முடியை
கோதி வினவிட
ஒரு கரமில்லா பொழுது.

புயலுக்குள் இருகிய இதயத்தை
சிக்கெடுத்து வலுக் கொடுக்க
ஒரு ஆறுதல் உறவு
இல்லா தருணம்.

தாங்க முடியா சோகத்தில்
ஒரு மிடரு அன்பு கிடைக்காத
நீட்ச்சிய பொழுது.

இத்தனை
இடர்களுக்குப் பின்தானே
"நான் "எனும் அழகுத் திமிர்
சிலருக்கு வாய்க்கிறது என்பது
பலருக்கு புரியாமலே இருக்கிறது.

"எதுவும் கொஞ்ச காலம் தான்"



கவிஞர் ஹுமதா ஏ கப்பார்,உயன்வத்த

# ஆசானே உமது பணி உன்னதமானது



ஆசானே!
மார்க்கக் கல்வியையும் கற்பித்தீர்கள்
புத்தகக் கல்வியையும் புகட்டினீர்கள்
உலகக் கல்வியையும் ஊட்டினீர்கள்

இவ்வுலக வெற்றிக்கான பாதைக்கும்
மறுவுலக வெற்றிக்கான பாதைக்கும்
சீரான வழியைக் காட்டினீர்கள்

வாழ்க்கையின் யதார்த்தத்தைக் கற்றுத் தந்தீர்கள்

வாழ்வில் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை
உங்கள் அனுபவங்களினூடாக விளக்கினீர்கள்


அத்தோடு விட்டு விடாமல் அச்சவால்களை
எதிர்கொள்ளக் கூடிய மன வலிமையையும்
கற்றுத் தந்தீர்கள்

நீர் கற்பித்ததை நடைமுறைப் படுத்துகையில் உணர்கிறேன்
ஆசானே! உமது பணி உன்னதமானது என்று

கவிஞர் ஸனா தௌபீக்,திருகோணமலை (இலங்கை)

# உறுப்பு தானம்

மனிதன் உயிர் வாழ உணவு, உடை, இருப்பிடமன்றோ?
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
தானத்தில் சிறந்தது அன்னதானமே என்கிறார் சிலர்.
அன்னமென்பது ஒரு மனிதனின் உயிர் வாழ
அவசியமான ஒன்று தானே!
எவ்வளவு செல்வத்தை நீ வாரி வழங்கினாலும்,
மனமானது ஆசையில் அடங்காது தானே!
வயிறு நிறைய சாப்பாடு போட்டால் போதும், போதும்
என்று சொல்வது உணவு மட்டும் தானே!
இரத்த தானம் உயிரை காக்கும் மிக, மிகச்சிறந்த தானம்.
உறுப்புத் தானம் என்பது மனிதாபிமானம்,
உள்ள நல்ல உள்ளங்கள், கருணையுடன் தருவது.
உயிர் வாழும் போது நமக்கு நோய்வாய்ப்
பட்டு அதன் மூலம் உறுப்புக்களை இழக்க
நேரிடலாம். தக்கச் சமயத்தில் உறுப்பு தானம்
தரும் ஜீவ காருண்யர்கள் சரித்திரத்தில் இடம்பெறுவர்.
சில மணித்துளிகள், மட்டுமே என்று மருத்துவர்
கைவிட்ட நிலையில், உறவினர்கள் மனமுவந்து
எல்லா உறுப்புக்களையும் தானம் செய்கிறார்கள்.
அவர்கள், நேரே சொர்க்கத்திற்குத் தான் செல்வர்.
நாம், உயிருடன் இருக்கும் போதே
எழுதி வைத்து விட்டோமானால்,
கண் தானமாகவாவது தரலாமே!
நாம் இறந்தப் பின் இந்த உடல்
மண்ணுக்குத் தானே போகிறது!
யாரேனும் வாழ்ந்து நம்மை
வாழ்த்தட்டுமே!
நம்மால் முடிந்த தானங்களைச்
செய்து இப்புவியில் பெருமை பெறுவோமாக!



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ.,ஊத்தங்கரை

# திருக்குறள்

வாழ்க்கைக்கு வழி காட்டும் நன்நெறியடி
வாழ்வை செழுமையாக்கும் தாரக மந்திரமடி
தமிழின் பெருமையை எடுத்தியம்பும் பொக்கிஷமடி
பலர் படிக்க மறந்த வரிகளடி
சிலர் புரியத் தவறிய மந்திரமடி
நாம் படிக்க வேண்டிய கட்டாயமடி
இரண்டு இரண்டு அடியாய் வள்ளுவர்
வழங்கிய இரண்டடி இதுவே திருக்குறள்.




கவிஞர் சனூபா தாஹிர்,இலங்கை

# தலைகீழ் சிற்பம்

சட்டை பொத்தான் சரிவர அணிவதில்லை
சில நேரம் சிகை நேர்படுத்தலும் இல்லை

குறித்த நேரத்தில் உண்பதும் இல்லை
நடுநிசியில் உலாபோகும் உருவம்
போன்று உறக்கமும் இல்லை

வாகனங்கள் சாவி மறந்து
வீட்டில் திட்டு வாங்குவதும்
தொடர்கதையாகிவிட்டது

பால் வாங்கிவரச்சொன்னால்
மாவு வாங்கி வருவதும்

வெகு நேரம் நிலா ரசிப்பதும்
தனிமையில் தவம் கிடப்பதும்

பேசிச் சென்றவளின் வார்த்தைகளை
மெல்ல மெல்ல மனதுக்குள்
சொல்லிப் பார்ப்பதும் அன்றாடச்
செயல்களில் ஒன்றாகிவிட்டது

எதிலும் அழகியல் தேடி
அலைகிறது மனம்

அவளை காணாவிடில்
கண்ணீர் கூட துளிர்த்து விடுகிறது.

என்னை இன்னும் என்னவெல்லாம்
செய்யக் காத்திருக்கிறதோ இந்த காதல்!





கவிஞர் மோகன்ராஜ்

# கடன் என்றாரே?

உலகு உண்டு கடவுளும் கண்டானே கடன் ஒன்று

மனிதன் வாழ்க்கையில்
பிறப்பிலும் கடன்
இறப்பிலும் கடன்
கடல் வற்றினாலும்
கடன் வற்றுவதில்லை.



வாழ்க்கையில் கரு ஒன்று
கடனாக காலத்தில் களம் காணுது.
கைமீறி செய்தாயோ காலத்தில்
கடனாளியா மனிதா.

கலியுகத்தில் கடவுளும் கடனாளியே
காயம் பட்ட கற்சிலையில்.
பிறவி ஒன்று எடுத்தோமே
பூமியில் புதுப்புது பிச்சையில்.

கால் வயிற்று கடன் தீர்க்க
தீண்டுதே தீமைகள்.
ஏழையினும் ஏமாளிகளின்
முதுகில் முற்புதற் போல்.

பணக்காரன் பாகுபாட்டில் பதுங்குதே வஞ்சகத்தின்
பஞ்ச வேஷம்.
பணம் தீண்டும் கையில்
பிணம் தீண்டுதே நாட்டில்.



ஏடுகளில் இடம் இல்லையே
கடன் என்னும் தொல்லையில்.
கருவும் கலையுது
விழி நீர் நனையாமல் நாட்டில்.

இன் ஈட்ட பிச்சையில் வாழ்வீரோ
புண்பட்ட புன்னகையில் பலர்.
நாம் விதைக்கும் ஆயுதம் நாளொன்றுக்கு பாயுது
பல நெஞ்சத்தில் கடன் என்னும் மரணத்தில்
பணம்.

நீவிர் நாவிற் கானா களம்
ஏவீர் கடன் சுடுவீர்.

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# அமர்நீதி நாயனார்

சோழர் ஆட்சியில் பெருமை மிக்க நகரம் திருப்பழையாறை
வாழும் மக்களின் நலம் பேணும் சிறந்த வணிகர் அவர்
வாழையடி வாழையான வைசியர் குலத்தில் அவதரித்தவர்
தோழமையோடு சிவ பக்தரான வியாபாரி அமர்நீதியார்

தங்கம், முத்து, பவழம், வைரம், நவரத்தினம்,, துணி மணிகள்
வங்கக் கடல் வழியே தருவித்து விற்கும் பெரும் செல்வந்தர்
எங்கெல்லாமோ இருந்து மக்கள் குவிந்தார்கள் இவர் கடையில்
கங்கை தலையில் சூடிய சிவன் மீது நீங்கா அன்பு கொண்டவர்

வரும் சிவன் அடியார்களுக்கு தினம் தினம் திருவமுது படைப்பார்
தருமம் செய்து செய்து சிவந்த கைகளை உடையவர் அமர்நீதியார்
பெரும் அடியார் கூட்டம் தினம் புற்றீசல் போல் இவரிடம் வந்தனர்
விரும்பி வருபவர்களுக்கு கந்தை, கீள் , உடை, கோவணம் தருவார்

தங்கி இளைப்பாறி பசியாற திருநல்லூரில் திருமடம் கட்டினார்
அங்கேயே அமர்நீதியாரும் வந்து சிறப்பாக பார்த்துக்கொண்டார்
எங்கு பார்த்தாலும் மக்கள் அமரநீதியாரை வாழ்த்திப் பணிந்தார்கள்
சங்கு சுட்டாலும் வெண்மை தருமா பார்க்கலாம் இவர் வாழ்க்கையில்

செஞ்சடையார்,உருமாறி திருப்பாதங்கள் நிலத்தில் பதிய நடந்து வந்தார்
பஞ்ச நாதனாக பிரம்மாச்சாரியாக இடையில் கோவணத்துடன் வந்தார்
தஞ்சமென வந்தவர் போல் அமர்நீதியார் திருமடத்தின் வாசல் வந்தார்
எஞ்சலார் போல் உடல் முழுதும் திருநீறு பூசி, விபூதி மணம் வீச வந்தார்

கம்பீரமாக கையில் பிடித்த தண்டினை தோளில் சாய்த்து ஏந்தி நின்றார்
தம்பிரான் கோலில் இரண்டு கோவணம், விபூதி பை, தரபை கட்டியிருந்தார்
எம்பிரான் போல் நிற்கும் அடியாரை வணங்கி வரவேற்றார் அமர்நீதியார்
சம்பிரதாயமாக பொருள் வேண்டி வரவில்லை இவர் என்று உணர்ந்தார்



"வராதவர் வந்துள்ளீர், என் தவத்தின் பலனே தங்கள் வருகை
தராதரம் அறிந்தவர் தாங்கள் இங்கு திருவமுது செய்யவேண்டும்"
"நீராட காவிரிக்கு செல்கிறேன், இந்தக் கோவணம் உம்மிடம் வை
சராசரி கோவணம் அல்ல இது, இதை பத்திரமாக திரும்பக் கொடு."

தண்டில் இருந்த இரண்டில் ஒன்றை அமர்நீதியாரிடம் ஒப்படைத்தார்
விண்ணவன், சிவன் முடியில் கங்கை இருக்க காவிரி சென்றார் நீராட
கண்ணில் ஒற்றி, கோவணத்தை பத்திரமாக பேழையில் வைத்தார்
மண்ணுலக் ஆடலரசன் குளித்து வந்து கொடுத்த கோவணம் கேட்டார்

தன்னிடம் கொடுத்த கோவணம் பேழையில் இல்லை, தடுமாறினார்
"உன்னிடம் இருக்கும் எதுவும் இதற்கு ஈடாகாது முடிந்தால் கொடு" என்றார்
தன் தண்டில் இருக்கும் கோவணத்தை எடுத்து துலாபாரத்தில் வைத்தார்
தன்னிடம் இருக்கும் அத்தனை கோவணங்களும் தராசில் சமமாகவில்லை

பிரமிப்புடன் அமரர் தன் திரவியங்கள் நவரத்தினங்கள் எல்லாம் வைத்தார்
வரலாறு காணாதது கோவணம் தராசு தட்டு அணு அளவு அசையவில்லை
சரம் சரமாக பொன்னும் மணியும் துணிகளும் அத்தனையும் வைத்தார்
பிரளயம் வந்தது போல் கோவணத் தட்டு அப்படியே அசையவில்லை

தொலைந்துபோன கோவணத்திற்கு ஈடாக பொருளே இல்லாத நிலை
நிலை குலைந்த நீதியார் தன் மனைவி மகனுடன் தராசில் நின்றார்
அலை திரண்ட மக்கள் வியந்து நிற்க கோவணத் தட்டு சமமானது
சிலையென நின்ற நீதியார்க்கு சிவனே காட்சி தர முத்தி பெற்றார் .

**கவிஞர் ந.திருக்காமு,பாண்டி**

# கண்ணகியும் கையில் சிலம்பும்

தலைவிரி கோலமாய்
தகிக்கும் விழியோடு
கையில் சிலம்பும்
கட்டுடல் மேனியும்
வேங்கைப் புலியாய்

அரண்மனை அலற
என்ன தவறிழைத்தான் என்னவன்
கள்வனென்றால் என்னசாட்சி
ஆவேசத்தில் கொதித்தெழுந்தாள்



அரசனும் அமைதியில்
வாயடைத்து இருக்க
காற்சிலம்பை கோபத்தில் வீசியெறிந்திட
சிதறித் தெறித்தன முத்துப்பரல்கள்

செங்கோல் ஆட்சியும்
செல்லாது போனது
மன்னவன் நீதிதவறியதால்
மறுகணமே மாண்டானே

நீதிகேட்ட முதற்பெண்
உடைத்த நீதி
கற்புக்கரசி ஆத்திரம்
மதுரை மாநகரமே தீக்கிரையாக்கியது

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# தமிழறிஞர் கா. நமச்சிவாயம்

(கட்டுரை)

## சிறப்பு



பண்டிதர் கா. நமச்சிவாய முதலியார் (Pandit C. R. Namasivaya Mudaliar, 20 பிப்ரவரி 1876 — 13 மார்ச் 1936) தமிழகத்தின் சிறந்த புலவராகவும், தமிழறிஞராகவும், தமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கியவர்.

## வாழ்க்கைக் குறிப்பு

வட ஆற்காடு மாவட்டம், காவேரிப்பாக்கம் என்ற ஊரில் ராமசாமி முதலியார்-அகிலாண்டவல்லி தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நமச்சிவாயர் தம் இளமைக்கால கல்வியைக் கற்றார். நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், விவேக சிந்தாமணி முதலிய நூல்களைக் கற்றுத் தேர்ந்து, தமது பதினாறாவது அகவையில், காவேரிப்பாக்கத்தை விட்டு நீங்கி, சென்னை தண்டையார்பேட்டையில் தங்கி, அங்கிருந்த ஒரு தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகப் பணியேற்றார். 1906-ஆம் ஆண்டு சுந்தரம் என்னும் அம்மையாரை நமச்சிவாயர் மணந்து ஆண்மக்கள் இருவரையும் பெண் மக்கள் இருவரையும் பெற்றெடுத்தார்.

தொண்டை மண்டல துளுவ வேளாளர் பள்ளியில் தமிழ்ப் புலவராகப் பணியாற்றி வந்த மகப்பேறு இல்லாத மகாவித்துவான் மயிலை சண்முகம் பிள்ளை, நமச்சிவாயரைத் தமது மகனாக கருதி தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றார். பன்னிரண்டு ஆண்டுகள், தண்டையார்பேட்டையிலிருந்து மயிலாப்பூருக்கு ஞாயிறுதோறும் நடந்தே சென்று பாடம் கேட்டுவந்தார்.

# தமிழறிஞர் கா. நமச்சிவாயம்

(கட்டுரை)

## வாழ்க்கைக் குறிப்பு

நமச்சிவாயர் திருத்தணிகை முருகன் பக்தர். மாதந்தோறும் கிருத்திகையன்று திருத்தணிகை சென்று தணிகைவேலனை வழிபடும் வழக்கம் கொண்டவர்.

## பணிகள்

1895-இல் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு சிறிய வேலையில் சேர்ந்தார். ஓராண்டுக்குப் பிறகு அதிலிருந்து நீங்கி, சென்னை செயிண்ட் சேவியர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணியில் சேர்ந்தார். பின்னர், ராயபுரத்தில் இருந்த "நார்த்விக்' மகளிர் பாடசாலையிலும் அதன்பிறகு "சிங்கிலர்' கல்லூரியிலும் தமிழ்ப் பணியாற்றினார். 1902 முதல் 1914 வரை சென்னை வேப்பேரியில் இருந்த எஸ்.பி.ஜி. உயர்நிலைப் பள்ளியில் (தற்போது புனித பால்ஸ் பள்ளியில்) தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.

1914-ஆம் ஆண்டில் பெண்களுக்கென அரசினரால் இராணி மேரிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது அங்கு தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார். 1917 இல் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்க் குழுவில் தலைமைத் தேர்வாளராகத் தெரிவு செய்யப்பட்டார். சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் பண்டிதர் ஈ. வி. அனந்தராம ஐயர் இறந்ததை அடுத்து அவரது இடத்திற்கு நமச்சிவாய முதலியார் நியமிக்கப்பட்டு, 1920 முதல் 1934 வரை பணியாற்றினார். உ.வே.சாமிநாதய்யர், மறைமலை அடிகளார், திரு.வி.க. ஆகியோர் நமச்சிவாயர் காலத்து வாழ்ந்த சான்றோர்களாவர்.

# தமிழறிஞர் கா. நமச்சிவாயம்

(கட்டுரை)

## அரசுப் பணி

1917-ஆம் ஆண்டில் அப்போதிருந்த தமிழ்க் கழகத்தின், தலைமைத் தேர்வாளராக நமச்சிவாயரை அன்றைய ஆங்கிலேய அரசு நியமித்தது. 1918-ஆம் ஆண்டில் தமிழ்க்கல்வி அரசாங்க சங்கத்தில் உறுப்பினர் பதவியை ஏற்றார். 1920-இல் இச்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1934 வரை இப்பதவியில் தொடர்ந்தார்.


இவரது காலத்தில், 'தமிழ் வித்துவான்' தேர்வை முதன் முதலாக அறிமுகப்படுத்தினார். அதற்கு முன், வடமொழி பயில்வோருக்கு மட்டுமே பல்கலைக்கழகத் தேர்வு இருந்து வந்தது. மேலும், பள்ளிகளில் தமிழாசிரியர்கள் நியமனம் பெறவும், ஊதிய உயர்வு வழங்கிடவும் இவர் பாடுபட்டார். மாணவர்கள் தமிழ் இலக்கணத்தை விரும்பி கற்கும் வகையில் 'தமிழ்ச் சிற்றிலக்கணம்' எனும் அரிய நூலை எழுதி வெளியிட்டார். 'தமிழ்ப் புலவர் சங்கம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்து அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

தை முதல் நாளைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாட வழி செய்தார். திருவள்ளுவருக்கு முன் - திருவள்ளுவருக்குப் பின் என தமிழகத்துக்கு ஒரு சகாப்தகால அளவு கிடைக்க வழிவகுத்தவரும் இவரே. இதற்கு உற்ற துணையாக உ.வே.சாமிநாதய்யரும், மறைமலை அடிகளாரும் இருந்தனர். நமச்சிவாயரது தமிழ்ப்பணி அனைத்துக்கும் பனகல் அரசர், தமிழவேள் சர் பி.டி.இராஜன், டாக்டர் ஏ.எல்.முதலியார், ராஜா சர் அண்ணாமலை செட்டியார் ஆகியோர் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

# தமிழறிஞர் கா. நமச்சிவாயம்

(கட்டுரை)

## இயற்றிய நூல்கள்




கீசகன் - நாடகம்
பிருதிவிராஜன் - நாடகம்
தேசிங்குராஜன்
ஜனகன்

உரையெழுதிப் பதிப்பித்த நூல்கள்
ஆத்திச்சூடி
வாக்குண்டாம்
நல்வழி
தொல்காப்பியம் பொருளதிகாரம்
இளம்பூரணம்
தணிகைப் புராணம்
தஞ்சைவாணன் கோவை
இறையனார் களவியல்

## மண்ணை விட்டு மறைந்தது

பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியர்களுக்கென நல்லாசிரியன் எனும் திங்களிதழை நடத்தி, அதில் தமிழ், தமிழர் பெருமை கூறும் கட்டுரைகளை தொடர்ந்து எழுதி, 1936ஆம் ஆண்டு பொங்கல் திருநாளின் போது திருவள்ளுவர் திருநாள் கழகத்தை தோற்றுவித்து, அறுபதாம் வயது மணிவிழா மலர் எழுதி வெளியிட திட்டமிட்டிருந்த நிலையில் 13.3.1936இல் தமிழ் மண்ணை விட்டு மறைந்தார்.

கவிஞர் அ.வில்சன்,இதழாசிரியர்



அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
நிலவுக்கு குறி வையுங்கள்..
ஒரு வேளை நீங்கள்
தோற்றாலும் நட்சத்திரங்களில்
கால் பதிப்பீர்கள்..!
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com